**கவனிக்க.-** *2015.10.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*
**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் பொலநறுவை நீதாசன வலயத்திற்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1939 - 2015 ඔක්තෝබර් මස 30 වැනි සිකුරාදා - 2015.10.30

*1939 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1644 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1661 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர்கள் முஸ்லிம் விவாக பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.*

*2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.*

*3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.*

*5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.*

*6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.*

*7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, கார்த்திகை மாதம் 30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.*

*ஈ. எம். குணசேகர,*
*பதிவாளர் நாயகம்.*

*பதிவாளர் நாயகம் திணைக்களம்,*
*இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2015, ஒற்றோபர் 8.*

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | ஆரச்சிக்கட்டு | புளிச்சங்குளம் பிரதேசத்தின் பிட்டிகல் கோறளை வடக்குப் பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

*10-1036*

---

## இலங்கை நில அளவைத் திணைக்களம்

இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

*இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு நியமனம் செய்வதற்கு பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2015.11.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "நில அளவையாளர் நாயகம், நில அளவையாளர் நாயகம் அலுவலகம், இல. 150, கிருல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 5" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பயிலுநர் நில அளவையாளர் பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்" எனும் பதம் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் தவிர்ந்த வேறு விதங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

2. சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருப்பதுடன் அது நிரூபிக்கப்படவும் வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ஆ) சிறந்த நன்னடத்தை உடையவராகவும், சிறந்த உடற்றகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;
(இ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்குக் குறையாமலும் 33 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;
(ஈ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று சகல கல்வித் தகைமைகளும் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதைக் கவனத்திற் கொள்க.

3. **சேவை நிபந்தனைகள்** :

(i) ***சம்பளம்.***- இப்பதவிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட திரட்டிய மாதச் சம்பளம் பின்வருமாறு பொ. நி. சுற்றறிக்கை இல. 06/2006 (iv) MN-5-2006A
ரூபா 16,720 - 10 x 320 - 11 x 365 - 15 x 450 - ரூபா 30,685.

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும் ;

(iii) அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொதுவான நிபந்தனைகளுக்கும், 2006.02.27 ஆந் திகதிய 1434/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை நில அளவையாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் மற்றும் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்ட அல்லது காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு, தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கைத் நில அளவைத் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

4. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) நியமனம் பெறுபவர்கள் திணைக்கள விடயங்களில் ஆரம்பப் பயிற்சிகளைப் பெறுதல் வேண்டும் ;

(ii) அவர்களுக்கு வழங்கப்படும் அரசாங்க களஞ்சியப் பொருட்களுக்காக 25,000 ரூபாவைப் பிணைப்பணமாகச் செலுத்துவதற்கு அவர்கள் கடப்பாடுடையவர்கள் ஆவர்.

(iii) பயிற்சிக் காலம் முடிவுற்றதும் அவர்கள் இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் நில அளவையாளர் ஒருவராக ஆறு (6) வருட காலத்திற்குப் பணியாற்றுவதற்கு நியமிக்கப்படுவார். அந்நோக்கத்திற்காக நியமிக்கப்படுபவர்கள் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்கு வேண்டப்படுவதுடன் 1,50,000 ரூபாவை விடக் குறையாத பெறுமதியுடைய சொத்துக்களை உடைய பிணை முறி ஒன்றையும் செலுத்துமாறு வேண்டப்படுவர்.

5. **கல்வித் தகைமைகள்**.- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட நில அளவையியல் விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. **தேர்ந்தெடுக்கும் முறை**.- விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். இது தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சித்தி பெற்று வெளியேறிய ஒரே பிரிவிலுள்ள நில அளவை விஞ்ஞானப் பட்டதாரிகள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்படும். பட்டப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட சிறப்புச் சித்தியும் (Merit) அடிப்படையாக கவனத்திற்கு எடுக்கப்படும். விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்த சகல நில அளவை விஞ்ஞானமாணிப் பட்டதாரிகளும் நேர்முகப் பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகளையும் ஒளிப்படப் பிரதிகளையும் நேர்முகப் பரீட்சைச் சபையில் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) பட்டப் படிப்புச் சான்றிதழும் ஏனைய கல்வித் தகைமைச் சான்றிதழ்களும் ;
(iii) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(iv) இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள். இவற்றில் ஒன்று, சம்பந்தப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் மேல் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

7. நியமனத்திற்காக வேண்டப்பட்ட தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்களும் மற்றும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

8. பரீட்சார்த்தி எவரேனும் தகைமையற்றவர்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டால், அவர் நேர்முகப் பரீட்சைக்கு முன்னதாகவோ அல்லது நேர்முகப் பரீட்சையின்போதோ அல்லது நேர்முகப் பரீட்சையின் பின்னரோ அல்லது அதன் பின் எந்த நேரத்திலும் அவருடைய பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு.

9. ஏற்கனவே அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். தபாலில் காணாமல் போகும் எந்தவொரு விண்ணப்பம் தொடர்பிலும் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

10. இவ்வாட்சேர்ப்புக் குறித்த எண்ணிக்கை மற்றும் நடவடிக்கைகளை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச்செய்தல் தொடர்பிலான முழு அதிகாரங்களும் நில அளவையாளர் நாயகத்தைச் சார்ந்தது. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி வாசகங்களிடையே மொழிபெயர்ப்பில் ஏதும் முரண்பாடு தென்படின் சிங்கள மொழி வாசகங்களில் கூறப்படுவதே செல்லுபடியாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பி. எம். பி. உதயகாந்த,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
இல. 150, கிருல வீதி,
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 5,
2015, ஒற்றோபர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**

1. பெயர் :
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில், உ-ம் (SILVA, A.B) :----.
   1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.
   1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.
   1.5 வழங்கப்பட்ட திகதி :----.

2. முகவரி :
   2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   2.2 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழ்) :----.
   2.3 தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. தொலைபேசி இலக்கம் :
   கையடக்கத் தொலைபேசி :----.
   வதிவிடத் தொலைபேசி :----.

4. பிரசாவுரிமை (பரம்பரையாகவா அல்லது பதிவு மூலமாகவா என்பதைக் குறிப்பிடுக. பதிவு மூலமாயின் பதிவு இலக்கத்தைக் குறிப்பிடுக) :----.

5. பால் :
   ஆண் - 0, பெண் - 1 ☐
   (கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

6. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :----.

7. பிறந்த திகதி :

   வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

   7.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

   வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

8. கல்வித் தகைமைகள் :
   (i) பல்கலைக்கழகம்/கல்வி நிறுவனம் :----.
   (ii) பட்டமும், பட்டம் பெற்ற திகதியும் :----.
   (iii) பதிவு இலக்கம், பதிவுத் திகதி :----.
   (iv) வெளிவாரி/உள்வாரி :----.
   (v) சுட்டெண் :----.
   (vi) வகுப்பு (மேல் பிரிவு/கீழ் பிரிவு) :----.
   (vii) பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

9. கணினி விஞ்ஞானம் தொடர்பாக பின்பற்றிய பாடநெறிகள் சம்பந்தமான விபரங்கள் :----.

10. தாய்மொழிக்கு மேலதிகமாக ஏனைய மொழிகளில் உள்ள தேர்ச்சிகளும் சித்தியெய்திய பரீட்சைகளும் :----.

11. ஏனைய செயற்பாடுகளும் தகைமைகளும் :----.

12. ஏதேனும் குற்றத்திற்காக நீர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப் பட்டிருப்பின் அவை தொடர்பான அனைத்து விபரங்களையும் தருக :----.

13. ஏற்கனவே நீர் அரசாங்க சேவையில் உள்ளவராக இருந்தால், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியில் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளீரா என்பது பற்றிக் குறிப்பிடவும் :----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் ஏதேனும் பிழையானதென அல்லது பொய்யானதெனத் தெரியவந்தால் இப்பதவிக்குத் தகுதியற்றவராவேன் அல்லது சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன். மேலும் இவ்வாட்சேர்ப்புத் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலில் குறிக்கப்பட்ட சகல நிபந்தனைகளுக்கும் இத்தால் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தராயின் திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

நில அளவையாளர் நாயகம்,

இந்த நிறுவனத்தில் கடமையாற்றும் மேலே பெயர் குறிப்பிடப்பட் டுள்ள திரு./திருமதி/செல்வி ................................ அவர்களினால் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். மேலும் அவர் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உள்ளாகவில்லை என்பதையும் இப்பதவிக்கு இவர் தெரிவுசெய்யப் பட்டால் இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்./முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
பதவி முத்திரை.

திகதி :----.

10-1148

## அரசாங்க சேவை ஆணைக்குழு

கல்வி அமைச்சு

### இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 3 ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்ளல்

2003.01.22 ஆந் திகதிய அ. ம. வி/02/1904/128/086 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய 3 ஆம் வகுப்பின் விசேட கல்வி, தொழில்நுட்பப் பாடங்கள், தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் , மேற்கத்தேய சங்கீதம், சித்திரம், சங்கீதம், உடற்கல்வி மற்றும் கிறிஸ்தவ சமயம் ஆகிய பாடங்களுக்காக 2012.12.01 ஆந் திகதிவரை காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக கல்வி அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் 2015.11.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், கல்வி அமைச்சு, 'இசுறுபாய', பெலவத்த, பத்தரமுல்ல" எனும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வெற்றிடம் எனக் குறிப்பிட வேண்டும். சகல விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவத்தை தமது திணைக்களத்தின் பொறுப்பாளர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும். உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3. **தகைமைகள்**.- இலங்கை ஆசிரியர் சேவையின் அல்லது அதிபர் சேவையின் அல்லது இலங்கை கல்வி நிர்வாக சேவையின் நிரந்தரப் பதவி வகிக்கும் 2012.12.31 ஆந் திகதியன்று 3 வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவம் கொண்ட உத்தியோகத்தர்கள் இப்பதவிக்காக விண்ணப்பிக்கத் தகைமை பெறுவதுடன் அவ்வவ் பாடங்களுக்காக நிவர்த்திசெய்ய வேண்டிய தகைமைகள் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. ஆட்சேர்ப்பு முறை :**

4.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபை மற்றும் புள்ளி வழங்கும் ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுச் சபையினால் அங்கீகரிக்கப்படும் பிரயோகப் பரீட்சை நடைமுறைக்கமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். (உரிய புள்ளி வழங்கும் ஒழுங்கு விதிமுறை அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

4.2 நேர்முகப் பரீட்சையின்போது கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் :

4.2.1 பட்டச் சான்றிதழ் மற்றும் கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ் ;

4.2.2 தொழில் தகைமை தொடர்பான சான்றிதழ் ;

4.2.3 புள்ளி வழங்கும் ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய புள்ளி பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்க வேண்டிய சகல சான்றிதழ்களும்.

4.3 ஒரு விடயத் துறையின்கீழ் 3 நிறுவனங்களுக்கு விண்ணப்பிக்க முடிவதுடன் ஒரு பாடத்துறையைவிட கூடுதலாக விண்ணப்பிப்பதாயின் அதற்காக தனித்தனியான விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டும். பெற்றுக்கொள்ளும் புள்ளித் தொடர்களை அடிப்படையாகக் கொண்டு கல்வியியற் கல்லூரிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதன் பின்னர் தொடராக ஆசிரியர் கல்லூரி மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்களின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

**5. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

5.1 அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் இந்நியமனத்திற்கு உரியதாகும்.

5.2 இப்பதவி தற்காலிகமானது, 1999.03.11 ஆந் திகதிய இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமையைவிடக் குறைந்த தகைமைகளின்கீழ் மேற்கொள்ளப்படும். இவ்வாட்சேர்ப்பின் மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதி தொடக்கம் 5 வருடங்களில் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்தல் வெண்டும். அதுவரையில் இவர்களுக்குத் தற்காலிக நியமனக் கடிதம் வழங்கப்படும் :-

5.2.1 சலுகைக் காலத்திற்குள் பட்டம் அல்லது டிப்ளோமாதாரர்கள் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டம் அல்லது அதிவிசேட அல்லது திறமைச் சித்தியுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது முதலாவது/இரண்டாவது வகுப்பின் சித்தியுடன் கல்வி தொடர்பான பட்டத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5.2.2 ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் உரிய விடயம் தொடர்பான பட்டம் அல்லது அதிவிசேட அல்லது திறமைச் சித்திகளுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5.2.3 உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்கு தவறும் உத்தியோகத்தர்கள் தாம் வகித்த பதவிக்கு மீள அனுப்பப்படுவர்.

6. **வயதெல்லை**.- சம்பந்தப்பட்டதல்ல.

7. **பொதுவான தகைமைகள் :**

7.1 அதிசிறந்த ஒழுக்கநெறி முறைகள் மற்றும் நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராக இருக்க வேண்டும்.

7.2 இவ்வறிவித்தலுக்கமைய பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்காகத் தேவையான சகல தகவல்களையும் 2012.12.31 ஆந் திகதியன்று சகல முறைகளிலும் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

8. **சம்பள அளவு**.- இந்நியமனம் தற்காலிகமானது. இதற்கமைய தாங்கள் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யும் வரை தங்களுக்கு 22,935 ரூபா மாதாந்தச் சம்பளம் வழங்கப்படும். தற்போது அதனைவிடக் குறைந்த சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களுக்கு தற்போது பெறும் சம்பளம் மற்றும் சம்பளப்படி உயர்விற்குப் பதிலாக 250 ரூபா மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்படும்.

**குறிப்பு :**

* எந்தவொரு சான்றிதழ் அல்லது நிழற்படப் பிரதியினை விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பக் கூடாது.
* நேர்முகப் பரீட்சையின்போது தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறியவர்களின் விண்ணப்பப்படிவம் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் நேர்முகப் பரீட்சையின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆவணமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.
* அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில் தகைமைகளைப் பூர்த்திசெய்தது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழுக்கு அமையவாயின் அப்பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக உறுதிப்படுத்தும் சான்றிதழை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும்.
* இவ்வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டபிள்யூ. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2015, ஐப்பசி 14.

**அட்டவணை** - I

| தொடர் இல. | பாடங்கள் | கல்வி மற்றும் தொழில் தகைமை | மொழி | வெற்றிட எண்ணிக்கை மற்றும் காணப்படும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | விசேட கல்வி | (i) உரிய பாடங்களில் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் சான்றிதழுடன் 7 வருடங்களை விடக் குறையாத கற்பித்தல் அனுபவம் காணப்படல். | சிங்களம் | வெற்றிடம் 1<br>ஹாப்பிட்டிகம தே. க. க. (பிரேல்) |
| | | | தமிழ் | வெற்றிடம் 2<br>அட்டாளைச்சேனை தே. க. க., யாழ். தே. க. க. |
| 2 | தொழில்நுட்பப் பாடங்கள் :<br>(i) இயந்திரத் தொழில் நுட்பம்<br>(ii) கலை<br>(iii) மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம்<br>(iv) உணவுத் தொழில் நுட்பம் | (i) உரிய பாடங்களில் பயிற்சி ஆசிரியர் சான்றிதழுடன் 7 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவம் காணப் படல். | சிங்களம் | வெற்றிடம் 1<br>[1]சியனா தே. க. க.<br>வெற்றிடம் 1<br>[3]சியனா தே. க. க. |

| தொடர் இல. | பாடங்கள் | கல்வி மற்றும் தொழில் தகைமை | மொழி | வெற்றிட எண்ணிக்கை மற்றும் காணப்படும் இடம் |
|---|---|---|---|---|
| | | | தமிழ் | வெற்றிடம் 1<br><br>[1]மட்டக்களப்பு தே. க. க.<br><br>வெற்றிடம் 1<br><br>[2]மட்டக்களப்பு தே. க. க.<br><br>வெற்றிடம் 1<br><br>[3]மட்டக்களப்பு தே. க. க.<br><br>வெற்றிடம் 1<br><br>[4]தர்காநகர் தே. க. க.<br><br>1. இயந்திரத் தொழில் நுட்பம்<br>2. கலை<br>3. மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம்<br>4. உணவுத் தொழில்நுட்பம் |
| 3 | தகவல் மற்றும் தொடர்பு சாதனத் தொழில்நுட்பம் | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் உரிய பாடத்துறை தொடர்பாக பட்டம் பெற்றிருத்தல் ; அல்லது<br><br>(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் கல்வி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழல்நுட்பப் பாடத்தைக் கொண்ட பட்டத்தைப் பெற்றிருத்தல் ; அல்லது<br><br>(iii) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட உரிய விடயம் தொடர்பான டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது அதிவிசேட/ திறமைச் சித்தியுடன் தேசிய போதனாவியல் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருத்தல். | ஆங்கிலம் | வெற்றிடம் 1<br><br>ருவன்புர தே. க. க.,<br>சாரிபுத்ர தே. க. க.,<br>மகாவலி தே. க. க.,<br>வவுனியா தே. க. க. |
| 4 | மேற்கத்தேய சங்கீகதம் | (i) உரிய பாடங்களில் பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் ; அல்லது<br><br>(ii) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் டிப்ளோமா மற்றும் 7 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவம்.<br>(உரிய பாடங்கள் எனப்படுவது தேசிய கல்வியியற் கல்லூரியில் அமுலில் உள்ள பாடநெறிக்குரிய பாடங்களாகும்.) | ஆங்கிலம் | வெற்றிடம் 1<br><br>மகாவலி தே. க. க. |

| தொடர் இல. | பாடங்கள் | கல்வி மற்றும் தொழில் தகைமை | மொழி | வெற்றிட எண்ணிக்கை மற்றும் காணப்படும் இடம் |
|---|---|---|---|---|
| 5 | சித்திரம் | (i) உரிய பாடங்களில் பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் மற்றும் 7 வருடங்களை விடக் குறையாத கற்பித்தல் அனுபவம் காணப் படல். | சிங்களம் | வெற்றிடம் 12<br><br>வடமேல் தே. க. க.,<br>பஸ்துன்ரட்ட தே. க. க.,<br>மகாவலி தே. க. க.,<br>நில்வலா தே. க. க.,<br>ஹாப்பிட்டிகம தே. க. க.,<br>தம்பதெனிய தே. க. க.,<br>நிட்டம்புவ தே. க. க,<br>ஸ்ரீபாத தே. க. க.,<br>புலதிஸ்ஸபுர தே. க. க.,<br>ஊவா தே. க. க.,<br>ருவன்புர தே. க. க. |
| | | | தமிழ் | வெற்றிடம் 4<br><br>மட்டக்களப்பு தே. க. க.,<br>அட்டாளைச்சேனை தே. க. க.,<br>யாழ். தே. க. க.,<br>ஸ்ரீபாத தே. க. க. |
| 6 | சங்கீதம் | (i) உரிய பாடங்களில் பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் மற்றும் 7 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவம் காணப் படல். | தமிழ் | வெற்றிடம் 6<br><br>ஸ்ரீபாத தே. க. க.,<br>மட்டக்களப்பு தே. க. க.,<br>அட்டாளைச்சேனை தே. க. க.,<br>தர்காநகர் தே. க. க. |
| 7 | உடற்கல்வி | (i) உரிய பாடங்களில் பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் மற்றும் 7 வருடங்களைவிடக் குறையாத கற்பித்தல் அனுபவம் காணப் படல். | சிங்களம் | வெற்றிடம் 9<br><br>ஊவா தே. க. க.,<br>பேராதனை தே. க. க.,<br>தம்பதெனிய தே. க. க.,<br>பஸ்துன்ரட்ட தே. க. க.,<br>மகாவலி தே. க. க.,<br>நில்வலா தே. க. க.,<br>சியனா தே. க. க.,<br>வடமேல் தே. க. க.,<br>ஹாப்பிட்டிகம தே. க. க. |
| | | | தமிழ் | வெற்றிடம் 7<br><br>யாழ். தே. க. க.,<br>ஸ்ரீபாத தே. க. க.,<br>மட்டக்களப்பு தே. க. க.,<br>வவுனியா தே. க. க.,<br>அட்டாளைச்சேனை தே. க. க. |
| 8 | கிறிஸ்தவம் | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உரிய பாடம் தொடர்பாக முதலாவது அல்லது இரண்டாவது பட்டத்தைப் பெற்றிருத்தல் ; அல்லது<br><br>(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் உரிய பாடத்துறை தொடர்பாக முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பில் பட்டத்தைப் பெற்றிருத்தல் ; அல்லது | சிங்களம் | வெற்றிடம் 1<br><br>வடமேல் தே. க. க., |

| தொடர் இல. | பாடங்கள் | கல்வி மற்றும் தொழில் தகைமை | மொழி | வெற்றிட எண்ணிக்கை மற்றும் காணப்படும் இடம் |
|---|---|---|---|---|
| | | (iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் உரிய பாடத்துறை தொடர்பாக பட்டம் அல்லது உரிய பாடம் தொடர்பாக பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல் ; அல்லது | | |
| | | (iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் உரிய பாடத்துறை தொடர்பாக பட்டம் அல்லது பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா சான்றிதழுடன் 7 வருடத்தை விடக் குறையாத கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றிருத்தல். | | |

**அட்டவணை - II**

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 3 ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்ளும் கட்டமைக்கப்பட்ட பிரயோகப் பரீட்சையின் புள்ளி வழங்கும் ஒழுங்கு விதிமுறைகள்**

(தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பப் பாடத்தைத் தவிர ஏனைய பாடங்களுக்காக)

***பகுதி 1 - கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை - உயர்ந்தபட்சப் புள்ளி - 50***

1. **கல்வித் தகைமை** — உயர்ந்தபட்சப் புள்ளி 20
(அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாகப் பெற்றுள்ள தகைமைகளுக்காக).
(உயர் சான்றிதழுக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்).

| | | |
|---|---|---|
| 1.1 | கலாநிதிப் பட்டம் (கல்வி அல்லது உரிய விடயம் தொடர்பாக) | - 20 |
| 1.2 | பட்டப்பின் பட்டம் (கல்வி அல்லது உரிய விடயம் தொடர்பாக) | - 15 |
| 1.3 | பட்டப்பின் பட்ட டிப்ளோமா | - 10 |

2. **ஆங்கில மொழித் தேர்ச்சித் திறமை** — உயர்ந்தபட்சப் புள்ளி 10
அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாகப் பெற்றுள்ள தகைமைகளுக்காக)
(உயர் சான்றிதழுக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்)

| | | |
|---|---|---|
| 2.1 | பட்டத்தை ஆங்கிலப் பாடமாகத் தொடர்ந்திருத்தல் | - 10 |
| 2.2 | பட்டத்தை ஆங்கில மொழி மூலம் தொடர்ந்திருத்தல் | - 08 |
| 2.3 | க. பொ. த. (உ. த.) ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் | - 06 |
| 2.4 | க. பொ. த. (உ. த.) ஆங்கில மொழியைத் தொடர்ந்திருத்தல் | - 05 |
| 2.5 | பல்கலைக்கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் டிப்ளோமா பாடநெறியைத் தொடர்ந்திருத்தல் (ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட) | - 04 |
| 2.6 | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சான்றிதழ் பாடநெறி | - 02 |

3. **தகவல் தொழில்நுட்ப அறிவு** — உயர்ந்தபட்சப் புள்ளி 10
(அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாகப் பெற்றுள்ள தகைமைகளுக்காக)
(உயர் சான்றிதழுக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்)

| | | |
|---|---|---|
| 3.1 | பட்டத்திற்காக தகவல் தொழில்நுட்பப் பாடத்தைத் தொடர்ந்திருத்தல்/தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்டம் | - 10 |
| 3.2 | தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி (ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட) | - 06 |
| 3.3 | தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி (6 மாதங்களைவிட மேற்பட்ட) | - 04 |

**4. கலைசார் செயற்சாதனை (கல்வித் துறைக்குரிய)** உயர்ந்தபட்சப் புள்ளி 05

4.1 ஆராய்ச்சி மற்றும் ஒப்படைகள் - 03
(பட்டம்/பட்டப்பின் பட்டம்/பட்டப்பின் பட்ட டிப்ளோமா அல்லது கலாநிதி பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் ஒப்படை இதன்கீழ் உரியதாகாது.)

4.2 வெளியீடுகள் (பகிரங்க சஞ்சிகை அல்லது பத்திரிகைகளில் பிரசுரமான) - 02

**5. நேர்முகப் பரீட்சையின் திறமைகள்** உயர்ந்தபட்சப் புள்ளி 05

மொத்தப் புள்ளிகள் 50

**பகுதி II - பிரயோகப் பரீட்சை - உயர்ந்தபட்சப் புள்ளிகள் 50**

1. பரிசோதனை சபை மூலம் பாடத்திற்குரியதாக வழங்கப்படும் தலைப்பின்கீழ் உரை நிகழ்த்துவதற்காக உரைக் குறிப்புப் படிவத்தைத் தயாரித்தல் - 25

2. அக்குறிப்புப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்திற்குரியதாக உரையினைப் பரிசோதனை சபை முன்னால் நடாத்துதல் - 25

மொத்தப் புள்ளிகள் 50

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 3 ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்ளும் கட்டமைக்கப்பட்ட பிரயோகப் பரீட்சையின் புள்ளி வழங்கும் ஒழுங்கு விதிமுறைகள்**

(தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பப் பாடத்திற்காக)

**பகுதி I - கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை - உயர்ந்தபட்சப் புள்ளி 50**

1. **கல்வித் தகைமை** (அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாகப் பெற்றுள்ள தகைமைகளுக்காக) (உயர் சான்றிதழுக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்) உயர்ந்தபட்சப் புள்ளி 20

1.1 கலாநிதிப் பட்டம் (கல்வி அல்லது உரிய விடயம் தொடர்பாக) - 20
1.2 பட்டப்பின் பட்டம் (கல்வி அல்லது உரிய விடயம் தொடர்பாக) - 15
1.3 பட்டப்பின் பட்ட டிப்ளோமா - 10

2. **ஆங்கில மொழித் தேர்ச்சித் திறமை** உயர்ந்தபட்சப் புள்ளி 10
(அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாகப் பெற்றுள்ள தகைமைகளுக்காக) (உயர் சான்றிதழுக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்)

2.1 பட்டத்தை ஆங்கிலப் பாடமாக தொடர்ந்திருத்தல் - 10
2.2 பட்டத்தை ஆங்கில மொழி மூலம் தொடர்ந்திருத்தல் - 08
2.3 க. பொ. த. (உ. த.) ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் - 06
2.4 க. பொ. த. (உ. த.) ஆங்கில மொழியைத் தொடர்ந்திருத்தல் - 05
2.5 பல்கலைக்கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் டிப்ளோமா பாடநெறியைத் தொடர்ந்திருத்தல் (ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட) - 04
2.6 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சான்றிதழ் பாடநெறியைத் தொடர்வதற்காக - 02

3. **கலைசார் செயற்சாதனை (கல்வித் துறைக்குரிய)** உயர்ந்தபட்சப் புள்ளி 15

3.1 ஆராய்ச்சி மற்றும் ஒப்படைகள் (பட்டம்/பட்டப்பின் பட்டம்/பட்டப்பின் பட்ட டிப்ளோமா அல்லது கலாநிதி பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் ஒப்படை இதன்கீழ் உரியதாகாது.) - 09
3.2 வெளியீடுகள் (பகிரங்க சஞ்சிகை அல்லது பத்திரிகைகளில் பிரசுரமான) - 06

4. **நேர்முகப் பரீட்சையின் திறமைகள்** உயர்ந்தபட்சப் புள்ளி 05

மொத்தப் புள்ளிகள் 50

***பகுதி II - பிரயோகப் பரீட்சை - உயர்ந்தபட்சப் புள்ளிகள் 50***

1. பரிசோதனை சபை மூலம் பாடத்திற்குரியதாக வழங்கப்படும் தலைப்பின்கீழ் உரை நிகழ்த்துவதற்காக உரைக் குறிப்புப் படிவத்தைத் தயாரித்தல் - 25
2. அக்குறிப்புப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்திற்குரியதாக உரையினைப் பரிசோதனை சபை முன்னால் நடாத்துதுல் - 25

மொத்தப் புள்ளிகள் 50

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் பதவி**

(ஏ4 அளவு தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்க வேண்டும். விடயத்துறை ஒன்றைவிட விண்ணப்பிப்பதாயின் தனித்தனியான விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (வண./திரு./திருமதி/செல்வி) :----.

2. முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   முழுப்பெயர் (தமிழில்) :----.

3. அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   அலுவலக முகவரி (தமிழில்) :----.

4. சொந்த முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   சொந்த முகவரி (தமிழில்) :----.

5. தொலைபேசி இலக்கம் :----.

6. (i) பிறந்த திகதி :
   வருடம் ---- மாதம் ---- திகதி ----.

   (ii) 2015.11.30 ஆந் திகதியன்று வயது :

   வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

7. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

8. முதல் நியமனத் திகதி மற்றும் பதவி (ஏற்கனவே அரச சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு உரியதாகும்) :----.

9. தற்போதைய பதவி தொடர்பான விபரங்கள் : (தற்போது தேசிய கல்வியியற் கல்லூரி/ஆசிரியர் கல்லூரிகளில் இணைப்பு அடிப்படையில் அல்லது ஆசிரியர் மத்திய நிலையங்களில் பதில் முகாமையாளர்களாகச் சேவையாற்றுபவர்கள் மாத்திரம் பூரணப்படுத்த வேண்டும்.) :
   (அ) பதவி :----.
   (ஆ) திணைக்களம் :----.
   (இ) அதற்கு இணைப்புச் செய்யப்பட்ட திகதி :----.
   (ஈ) நிறுவனம்/சேவை இடம் :----.

10. விண்ணப்பிக்கும் பாடம் :

| பாடம் | வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர் இலக்கம் | வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைபெறும் பாட தொடர் இல. | மொழி | விண்ணப்பித்த நிறுவனம் தொடர் ஒழுங்கில் |
|---|---|---|---|---|
| | | | | 1.<br>2.<br>3. |

11. கல்வி மற்றும் தொழில் தகைமை தொடர்பான விபரங்கள் :

(i) பட்டத் தகைமை :

| பட்டத்தின் பெயர் மற்றும் வழங்கிய நிறுவனம் | ஆண்டு | வகுப்பு | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ii) பட்டப்பின் பட்டத் தகைமை :

| வழங்கிய நிறுவனம் | சான்றிதழ் பெயர் | ஆண்டு ------- தொடக்கம் ---- வரை | பாடங்கள் | வகுப்பு அதிவிசேட/திறமை/ சாதாரண |
|---|---|---|---|---|
| | | | | |

(iii) பட்டப்பின் கல்வி டிப்ளோமா :

| சான்றிதழின் பெயர் மற்றும் வழங்கிய நிறுவனம் | ஆண்டு | கல்வி டிப்ளோமாவின் பெயர் விசேட/திறமைச் சித்தி | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(iv) ஏனைய தொழில் தகைமை (டிப்ளோமாச் சான்றிதழ் மற்றும் பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் தொடர்பான விபரங்கள்) :

| சான்றிதழின் பெயர் மற்றும் வழங்கிய நிறுவனம் | பாடநெறியின் காலம் | பாடங்கள் தொடர்பான விபரங்கள் |
|---|---|---|
| | | |

(v) ஆங்கில மொழி தொடர்பான தேர்ச்சி :

| க. பொ. த. (சா. த.) ஆண்டு | அதிவிசேடம்/திறமை/ சாதாரணம் என்பது | ஏனையவை | ஆண்டு | வகுப்பு |
|---|---|---|---|---|
| | | | | |

| பெற்றுள்ள உயர் சான்றிதழ் | வழங்கிய நிறுவனம் | தரம் |
|---|---|---|
| | | |

(vi) சேவை விபரங்கள் (முன்னர் வகித்த பதவி மற்றும் அப்பதவி வகித்த கால எல்லைகள். கால எல்லையுடன் குறிப்பிடுக.)

| திணைக்களம் | பதவி | நிரந்தர/தற்காலிக | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| | | | | |

12.

12.1 ஏதேனும் தண்டனைக்காக நீதிமன்றத்தில் நீங்கள் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா ? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடவும்.)

12.2 உங்களுக்கு எதிராக திணைக்களத்தினால் ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டுள்ளதா ?/இன்றேல் நீதிமன்றத்தினால் வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றதா ? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

12.3 இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட சகல தகவல்களும் எனது அறிவிற்கு எட்டிய வகையில் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் நான் இப்பதவியினைப் பெறுவதற்கு தகைமை அற்றவனாவேன் என்பதையும் நியமனம் பெற்ற பின்னர் இங்கு குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னிடம் நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படும் என்பதனையும் அறிந்துள்ளேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களப் பொறுப்பாளரின் சான்றிதழ்**

.................................................. இன் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கிறேன். இவர் எனது திணைக்களத்தின் நிரந்தர/தற்காலிக/சமயாசமய .................................... அடிப்படையில் சேவையாற்றுவதாகவும், இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என அறியத்தருகிறேன்.

----,
திணைக்கள/நிறுவனப் பொறுப்பாளரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

திணைக்களம் :----.
திகதி :----.

10-1172

---

## இலங்கை மதுவரித் திணைக்களம்

### II ஆம் தர மதுவரி சாரதிப் பதவி

மதுவரித் திணைக்களத்தின் II ஆம் தர மதுவரி சாரதிப் பதவிகள் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2015.11.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இல. 34, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மதுவரி சாரதி பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பப்படிவங்களும் உரிய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

3. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.**- II ஆம் தரம்- ரூபா 12,470 - 130 x 10 - 145 x 10 - 160 x 10 - 170 x 12 - ரூபா 18,860 உரித்துடையதாகும். ரூபா 13,915 மாதாந்த சம்பளப் படிநிலையில் வைக்கப்படும். (அ. நி. சு. 6/2006 (iv) இன்படி PL3-2006-A). மேற்படி சம்பள அளவுத்திட்டத்தின் 14,350 ரூபா சம்பளப் படிநிலையை விஞ்சு வதற்கு முன்னர் முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையொன்று உண்டு.

4. **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பங் களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவ ராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் பொருட்டு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.)

5. **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் தமிழ்/ சிங்களம் மற்றும் மற்றுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் கணிதம் அடங்கலாக ஆறு (6) பாடங்களில் இரு அமர்வு களுக்கு மேற்படாதவாறு சித்தியடைந்திருத்தல் ;

(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு 3 வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (அதனை சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்) ;

(iv) விண்ணப்பதாரர் நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும். (விண்ணப்பதாரரின் நல்லொழுக்கம் பற்றி தேசிய தகவல் நிலையம்/பிரதேசத்தின் பொலிஸ்/மதுவரி நிலையங் களிலிருந்து விசாரிக்கப்படும்).

(v) பகலில் போன்று இரவிலும் சேவையாற்றுவதற்கு உகந்த கண் பார்வையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலேனும் சேவையாற்றக் கூடிய உடல், உள தகுதியைக் கொண்டிருத்தலும் வேண்டும் ;

(vi) உயரம் குறைந்தபட்சம் 5 அடி 4 அங்குலமும், மார்பின் அளவு மூச்சு உள்வாங்காமல் 32 அங்குலமும் இருத்தல் வேண்டும் ;

(vii) நெடுஞ்சாலை சட்ட விதிகள் பற்றிய அறிவையும், மோட்டார் தொழில்நுட்பம் பற்றிய அறிவையும் பெற்றிருத்தல் வேண்டும். மோட்டார் பஸ் வண்டி, மோட்டார் கோச் ‘ஏ’ வகுப்பு ஓட்டுவதற்காக (கனரக வாகன தேர்ச்சி சான்றிதழ்) மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு முறை.**- மேற்படி 4 ஆம், 5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்ப தாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப் படுவதுடன், அங்கு விண்ணப்பதாரர்களது சான்றிதழ்கள்/ அனுமதிப் பத்திரங்கள் மற்றும் மோட்டார் தொழில்நுட்பம் பற்றிய அறிவு என்பன பரீட்சிக்கப்படும். தகுதியானவர்கள் பொருட்டு பிரயோகப் பரீட்சை யொன்று நடாத்தப்படும். பிரயோகப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் தொடர்பில் பொலிஸ் அறிக்கையும் மதுவரி பரிசீலனை அறிக்கையும் பெறப்பட்டதன் பிற்பாடு நிலவும் வெற்றிடங் களின்படி II ஆம் தர மதுவரி சாரதிகளாக நியமனம் வழங்கும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்படுவர். ஆட்சேர்ப்பு தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகளும் நிபந்தனைகளும் பின்பற்றப்படும். திணைக்கள கடமைகள் தொடர்பிலான இருவார பயிற்சி தோந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

7. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். இது மதுவரி திணைக்கள கட்டளைகளின்கீழ் கட்டுப்படுத்தப் படுகின்ற சீருடை அணியும் பதவியொன்றாகும்.

8. விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் நிழற்படப் பிரதிகளை (மூலப்பிரதிகளை அல்ல) தனது விண்ணப் பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) நற்சான்று பற்றி அண்மையில் பெற்றுக்கொண்ட இரண்டு நற்சான்றுச் சான்றிதழ்கள். அவற்றில் ஒன்று தான் நிரந்தர மாக வசிக்கும் பிரதேசத்தின் கிராம அலுவலரிடமிருந்து/ பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட நற்சான்றுச் சான்றிதழாக இருத்தல் வேண்டும் ;

(iii) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(iv) மோட்டார் வாகனம் ஓட்டுதல் தொடர்பாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடி யான சாரதி அனுமதிப்பத்திரம் ;

(v) விசேட தகைமைகளை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத் தக்க சான்றிதழ்கள்.

9. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற விண்ணப்பதாரர் களுக்கு அதுபற்றி எழுத்துமூலம் அறிவிக்கப்படும். இது தொடர்பில் பிரயாணச் செலவு போன்றன செலுத்தப்பட மாட்டாது.

எல். கே. ஜீ. குணவர்தன,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

இலங்கை மதுவரித் திணைக்களம்,
2015, ஒற்றோபர் 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரி சாரதிப் பதவி**
**(II ஆம் தரம்)**

1. (அ) முழுப்பெயர் (தாய்மொழியில்) :----.
   (ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (இ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

3. தற்போதைய முகவரி :----.
   (அ) நிரந்தர முகவரி :----.
   (ஆ) பொலிஸ் நிலையம் :----.

4. நீங்கள் இலங்கைப் பிரசையாவது பரம்பரையாகவா அல்லது பதிவின் மூலமா என்பது பற்றி (பதிவின் மூலம் எனின் குறித்த சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.) :---.

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :----.

6. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி -----.

7. வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----.
(பிறப்புச் சான்றிதழின் நிழற்படப் பிரதியொன்றை இணைக்கவும்.)

8. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்துள்ள பரீட்சைகளைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :----.

9. (i) வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தியின் iii இன்படி பெற்றுள்ள அனுபவம் பற்றி விபரிக்கவும் :----.

(ii) வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தியின் vii இன்படி உரிய சான்றிதழ் வழங்கியவர் (சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :----.

10. மார்பின் அளவு (மூச்சு உள்வாங்காமல்) : ---- செ. மீ. (---- அங்குலம்).

11. உயரம் :---- செ. மீ. (---- அடி ---- அங்குலம்).

12. விண்ணப்பதாரரைப் பற்றி விசாரித்து அறியக்கூடிய இருவரின் பெயர்கள், பதவிகள் மற்றும் முகவரிகள் :

(i) -------------------------------------------------------
-------------------------------------------------------

(ii) -------------------------------------------------------
-------------------------------------------------------

13. நீங்கள் இதற்கு முன் அரசாங்கத்தில்/மாகாண அரசாங்கத்தில் ஏதேனும் பதவியொன்றை வகித்திருப்பின் அதுபற்றிய விபரம். அந்தப் பதவியிலிருந்து விலகியிருப்பின் அதற்கான காரணத்தைக் குறிப்பிடவும்.

14. தற்போதைய பதவியும் சேவை நிலையமும் :----.

என்னால் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் பொய்யானவை அல்லது தவறானவை என நியமனத்தின் பின்னர் கண்டு பிடிக்கப்படின், நட்டஈடு எதுவுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10-1201

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் ஆரம்ப தொழில்நுட்ப சேவை வகையைச் சார்ந்த (PL-3-2006A) உருக்கி ஒட்டுநர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக (திறந்த) விண்ணப்பம் கோரல்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் ஆரம்ப தொழில்நுட்ப சேவை வகையைச் சார்ந்த (PL-3-2006A) உருக்கி ஒட்டுநர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகுதி உடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பதவிக்கான சம்பளப் படிமுறை மற்றும் சம்பளக் குறியீட்டு இலக்கம் :**

மாதமொன்றிற்கு ரூ. 12,470 - 10 x 130 - 10 x 145 - 10 x 160 - 12 x 170 - 18,860 எனும் சம்பள அளவுத்திட்டம் இப்பதவிக்கு உரித்தாகும்.

3. **பதவியின் தன்மை.**- நிரந்தரமானதும் மற்றும் ஓய்வூதியம் கொண்டதுமாகும்.

4. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம்.**- தரம் III

5. **பதவிக்குரிய பணிகள் :**

(i) ஆணிகள், திருகாணிகள், இரும்புக் கம்பிகளில் திருகுகளை வெட்டுதல், துளையிடுதல், தீட்டுதல், அச்சு இயந்திரத்தின் பகுதிகளைப் பழுதுபார்த்தல் ;
(ii) திணைக்களத் தலைவரினால் கையளிக்கப்படும் வேறு பணிகள்.

6. **தகைமைகள் :**

6.1 கல்வித் தகைமைகள் :

6.1.1 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆகக்குறைந்தது இரண்டு (2) திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

6.2 தொழில் தகைமைகள் :

6.2.1 மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து தேசிய தொழிற்திறன் (NVQ) நான்காம் மட்டத்திற்கு குறையாத மட்டத்தில் பதவிக்கு உரிய துறையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

6.3 உடற் தகைமைகள் :

6.3.1 விண்ணப்பதாரி பதவிக்குரிய பணிகளை நிறை வேற்றுவதற்குப் போதுமான உடல், உள தகைமை களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 வேறு தகைமைகள் :

6.4.1 விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

6.4.2 விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;

6.4.3 விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

6.4.4 பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான மேற்குறித்த அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று சகல வழிகளிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறை.**- விண்ணப்பதாரிகள் தகைமைகளைப் பரிசீலிக்கும் நேர்முகத் தேர்வொன்றுக்கும் பதவிக்குரிய செயன்முறை அறிவை மற்றும் ஆற்றலை அளவிடும் செயன்முறைப் பரீட்சையொன்றிற்கும் தோற்றுதல் வேண்டும். செயன்முறைப் பரீட்சையில் சித்திபெறுவதற்கு 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தகைமைகளைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது. தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் செயன்முறைப் பரீட்சையின்போது பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்கில் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களிடம் இருந்து நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

8. செயன்முறைப் பரீட்சையின் புள்ளிகள் கட்டமைப்பு மற்றும் பாடத்திட்டம் பின்வருமாறு :

8.1 புள்ளி விபரங்கள் :

| பாடத்துறை | மொத்தப் புள்ளிகள் | சித்தி பெறத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|
| 1. துறையுடன் தொடர்புடைய அடிப்படை அறிவு | 25 | 40 |
| 2. உபகரணங்களைப் பொருத்துதல், பழுதுபார்த்தல் மற்றும் கோளாறுகளை அறிந்துகொள்ளல் தொடர்பான ஆற்றல் | 25 | |
| 3. துறைக்குரிய உபகரணங்களைப் பயன்படுத்தி தரப்பட்ட ஆக்கம்/ நிர்மாணிப்பு/பொருத்துதல்/ பழுதுபார்த்தல் ஆகியவற்றில் ஒன்றை உரிய காலத்திற்குள் நிறைவேற்றுகையில் விண்ணப்பதாரி வெளிப்படுத்தும் திறனை/ ஆற்றலை பரிசீலித்தல் | 50 | |
| 4. மொத்தம் | 100 | |

8.2 பாடத்திட்டம் :

(i) 1/32 பார்வை அளவீட்டில் வாசிக்கக்கூடிய ஆற்றல் ;
(ii) தொழிலின்போது பயன்படுத்தப்படும் ஆயுதங்களின் பெயர்கள், அவற்றின் பாவனை மற்றும் பேணுதல் தொடர்பான அறிவு ;
(iii) பீ. ரீ. செய்தல் தொடர்பான அறிவு ;
(iv) செதுக்குதல் மற்றும் பட்டை தீட்டக்கூடியிருத்தல்.

9. **பதவியில் நிரந்தரமாக்குதல்.**- III ஆம் வகுப்பின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவர் மூன்று வருட (3) தகுதிகாண் காலத்திற்கு உட்படல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் உத்தியோகத்தர் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் பொது நிர்வாக சுற்றுநிருபம் 1/2014 இன் ஏற்பாடுகளின்படி மொழித் தேர்ச்சியைப் பூர்த்திசெய்திருப்பின் மற்றும் தகுதிகாண் காலத்தில் தமது பணிகள், வேலைகள் மற்றும் நடத்தை என்பவற்றை திருப்திகரமான முறையில் பேணி இருப்பின் தகுதிகாண் கால முடிவில் பதவியில் நிரந்தரமாக்கப்படுவார்.

10. **விண்ணப்பப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டிய முறை :**

10.1 விண்ணப்பப்படிவங்கள் வந்துசேர வேண்டிய இறுதித் திகதி 2015.11.30 ஆகும் ;

10.2 விண்ணப்பங்கள், இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் அமைய தயாரிக்கப்பட்டு உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு, விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “உருக்கி ஒட்டுநர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (திறந்த) விண்ணப்பம்” எனக் குறிப்பிட்டு 2015.11.30 ஆந் திகதிக்கு முன்னர் “அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 08” எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

11. இங்கு குறிப்பிடப்படாத வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் ஆரம்ப தொழில்நுட்ப சேவை வகைக்கான (PL-3-2006A) ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

12. இச்சேவைப் பிரமாணக் குறிப்பின்கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையினதும் நிதி ஒழுங்கு விதிகளினதும் ஏற்பாடுகள், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் கட்டளைகள், ஒழுங்கு விதிகள் மற்றும் நடைமுறை விதிகள், திணைக்கள ஏற்பாடுகள், அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் ஏனைய ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளைகள் என்பவற்றுக்கு ஏற்ப இணங்கி ஒழுகுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

13. இவ்வறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமிடத்து சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேகா,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க அச்சுத் திணைக்களம்**

*ஆரம்ப தொழில்நுட்ப சேவை வகையைச் சேர்ந்த (PL-3-2006A) உருக்கி ஒட்டுநர் பதவிக்கு (திறந்த) ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பம்*

1. முழுப்பெயர் :----------------------------------------------------------------.
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :
   - * தமிழில் :----------------------------------------------------------------.
   - * ஆங்கிலத்தில் :----------------------------------------------------------------.
3. முகவரி :----------------------------------------------------------------.
4. பிறந்த திகதி :----------------------------------------------------------------.
5. 2015.11.30 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் :---------------- மாதங்கள் :---------------- நாட்கள் :----------------
6. பால் (ஆண்/பெண்) :------------------------.
7. விவாகமானவர்/விவாகமாகாதவர் :-----------------------------------------.
8. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----------------------------------------.
9. தொலைபேசி இலக்கம் :-----------------------------------------------------------.
10. நீர் ஓர் இலங்கைப் பிரசையா ? :--------------------------------------------------.

11. கல்வித் தகைமைகள் :
    க. பொ. த. (சா. த.)
    சுட்டிலக்கம் :--------------------. தோற்றிய ஆண்டு :--------------------.

| | |
|---|---|
| (i) -------------------------------------------- | (vi) ------------------------------------------ |
| (ii) -------------------------------------------- | (vii) ------------------------------------------ |
| (iii) -------------------------------------------- | (viii) ------------------------------------------ |
| (iv) -------------------------------------------- | (ix) ------------------------------------------ |
| (v) -------------------------------------------- | (x) ------------------------------------------ |

வேறு தகைமைகள் (இருப்பின்) :

--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------

12. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் சேவை அனுபவம் (இருப்பின்) :

--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------

13. தொழில்சார் தகைமைகள் :

    (i) "உருக்கி ஒட்டுநர்" செயற்பாட்டிற்குரிய NVQ திறமைச் சான்றிதழ் பெற்றுள்ளீரா ? :---------------------------------------.

    (ii) அவ்வாறு பெற்றிருப்பின் அதன் மட்டம் ? :----------------------------------------------------------------.

(iii) ஏனைய தொழில் தகைமைகள் :

-----------------------------------------------------------------------------------------------------------------------
-----------------------------------------------------------------------------------------------------------------------
-----------------------------------------------------------------------------------------------------------------------
-----------------------------------------------------------------------------------------------------------------------
-----------------------------------------------------------------------------------------------------------------------
-----------------------------------------------------------------------------------------------------------------------
-----------------------------------------------------------------------------------------------------------------------
-----------------------------------------------------------------------------------------------------------------------
-----------------------------------------------------------------------------------------------------------------------
-----------------------------------------------------------------------------------------------------------------------
-----------------------------------------------------------------------------------------------------------------------

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதுமென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் இங்கு தரப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பிழையென நிரூபிக்கப்பட்டால் நான் பதவிக்கான தகைமையை இழப்பேன் எனவும் பதவியிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் நன்கு அறிவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

--------------------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----------------------------------.

14. ஏற்கனவே அரசாங்க சேவையில் பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் மட்டும் கீழே தரப்பட்டுள்ள பகுதியை நிரப்புதல் வேண்டும் :-

மேலே 1 இலிருந்து 13 வரையான தகவல்கள் சரியானவை எனவும் இவ்வலுவலர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், இவ்வலுவலர் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

--------------------------------,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்.

திகதி :-----------------------------------.

15. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

(விண்ணப்பதாரிகள் தங்கள் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர்/ஓய்வுபெற்ற அதிபர், பிரிவு கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர், 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த ஒன்றுதிரட்டிய சம்பளத்தைப் பெறும் அரச அல்லது உள்ளூராட்சி சேவையில் நிரந்தர பதவிநிலை அலுவலர் அல்லது பௌத்த விகாரையின் விகாரை அதிபதி அல்லது தலைமை தேரர் அல்லது ஏனைய சமய ஸ்தாபனங்களின் பொறுப்புள்ள குருவானவர்களில் கருத்திற்கொள்ளக்கூடிய நிலையிலுள்ளவர்கள் ஆகியோரில் ஒருவர் சான்றுபடுத்துதல் வேண்டும்.)

மேலே கையொப்பமிட்டுள்ள ........................................................................................ என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும், அவர் என் முன்னால் கையொப்பமிட்டாரெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

--------------------------------,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும் அலுவலக முத்திரையும்.

பெயர் :-------------------------------------------------------------------------------------.
பதவிப்பெயர் :-------------------------------------------------------------------------------.
முகவரி :------------------------------------------------------------------------------------.
திகதி :--------------------------------------------------------------------------------------.

10-1202

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**விவசாய அமைச்சு**

விவசாய திணைக்களம்

## *விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவை பதவிகளில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015*

விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் விவசாயப் போதனாசிரியர், ஆராய்ச்சி உதவியாளர் ஆகிய பதவிகளின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2015, நவெம்பர் 20 ஆகும்.

*2.1 திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளல் :*

*2.1.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2015, நவெம்பர் 20 ஆகும். அன்றைய தினம் விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதற்கேற்ப, வயது சம்பந்தமான தகுதியானது விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 1997.11.20 ஆந் திகதியாக அல்லது அதற்கு முன்னரான திகதியாகவும், 1985.11.20 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரான திகதியாகவும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.*

*2.1.2 பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் விண்ணப்பதாரிகள் கீழ்வரும் அடிப்படை கல்வித் தகைமைகளையும் தொழிற் தகைமைகளையும் பெற்றிருத்தல் அவசியமாகும்.*

| பதவிக்குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | 2.1.3 கல்வித் தகைமைகள் | | 2.1.4 தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | க. பொ. த. (சா. த.) | க. பொ. த. (உ. த.) | |
| 1<br><br>2 | விவசாயப் போதனாசிரியர்<br><br>ஆராய்ச்சி உதவியாளர் | மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருத்தல் | விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் உட்பட மொத்தம் மூன்று விஞ்ஞானப் பாடங்களில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி அடைந்திருத்தல் (பொது ஆங்கிலம், பொதுப் பரீட்சைப் பாடங்கள் தவிர்த்து) | மூன்றாம் நிலைக் கல்வி தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்படும் இரு வருட விவசாய விஞ்ஞான டிப்ளோமா ;<br>அல்லது<br>தொழில் துறையுடன் தொடர்பான தேசிய தொழில் திறன் (NVQ) 6 மட்டத்திலான தகைமை பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>உயர் கல்வி அமைச்சினாலும் மேற்கூறிய தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிலிருந்தும் தேவையான ஆலோசனைகளைப் பெற்று மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல வழிகளிலும் சமமானதென மூன்றாம் நிலை கல்வி, தொழில் கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்றிருத்தல் |

2.1.5 *ஏனைய தகைமைகள்.-* அனைத்து விண்ணப்பதாரிகளும் கீழ்க்குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்துள்ளமை அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;

ஏதேனும் சமயப் பிரிவில் கடமையாற்றுபவர்கள் இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தகைமையற்றவர்களாவர் ;

நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு பொருத்தமான உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல்.

**குறிப்பு.-** இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து டிப்ளோமாவினைப் பெற்றுக்கொண்டவர்கள் அப்பல்கலைக்கழகத்திலே டிப்ளோமாவுக்குரிய அடிப்படை பாடநெறியில் சித்திபெற்றிருக்கும் பட்சத்தில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றிருக்கவேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட முடியும்.

**கவனிக்க.-** விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதியன்று அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

2.2 மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் :

2.2.1

| பதவிக்குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | 2.2.2 கல்வித் தகைமைகள் | 2.2.3 தொழிற் தகைமைகள் | அனுபவம் |
|---|---|---|---|---|
| | | க. பொ. த. (சா. த.) | | |
| 1<br><br>2 | விவசாயப் போதனாசிரியர்<br><br>ஆராய்ச்சி உதவியாளர் | மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் | மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்படும் இரு வருட விவசாய விஞ்ஞான டிப்ளோமா ;<br>அல்லது<br>தொழில் துறையுடன் தொடர்பான தேசிய தொழில் திறன் (NVQ) 6 மட்டத்திலானதகைமை பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>உயர் கல்வி அமைச்சினாலும் மேற்கூறிய தொழில் நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிலிருந்தும் தேவையான ஆலோசனைகளைப் பெற்று மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல வழிகளிலும் சமமானதென மூன்றாம் நிலை கல்வி, தொழில் கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல் | உரிய துறையில் திணைக் களத்துக்குரிய ஆரம்ப நிலை தேர்ச்சித் தரம் அல்லாத பதவியொன்றில் (PL-01) அல்லது அதற்கு மேற்பட்ட பதவியொன்றில் தொழில் தகைமைகளுடன் 5 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் |

2.2.4 ***ஏனைய தகைமைகள் :***

(i) நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் ;
(ii) உரிய தினத்திலே 5 வருட திருப்தியான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

3. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அலுவலர் அனைத்துத் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருந்தால் மாத்திரம் சேவையில் ஆட்சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூலப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படும்.

4. திணைக்களத்தில் தற்போது காணப்படும் வெற்றிட எண்ணிக்கையில் 70% திறந்த போட்டிப் பரீட்சை மூலமும், 30% மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை மூலம் சேர்த்துக்கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் போதியளவு அடிப்படைத் தகைமைகளையுடைய உள்ளக விண்ணப்பதாரிகள் விவசாயத் திணைக்களத்திற்குள் இல்லாதவிடத்து எஞ்சிய எண்ணிக்கை திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளிலிருந்து பூர்த்திசெய்யப்படும். மேலும், ஏதேனும் வெற்றிட எண்ணிக்கையினை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் விடுவதற்கோ நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

**சம்பளமும் தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையும்.**- சம்பள குறியீட்டு இலக்கம் : எம். என். 03/2006ஏ

சம்பள அளவுத் திட்டம்.- 15,005 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - 27,885 ஆகும்.

III ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற 3 வருடங்களுக்குள் முதலாவது தகுதிகாண் தடைதாண்டிப் பரீட்சையிலும், II ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு 3 வருடங்களுக்குள் இரண்டாவது தகுதிகாண் தடைதாண்டிப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும். அரசகரும மொழி அல்லாத மொழி ஒன்றில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர் ஒருவர் தகுதிகாண் காலத்தினுள் விதிக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். நியமனத் திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியினை பொ. நி. சு. 07/2007 இன் I (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு அரச கரும மொழிகள் ஆணையாளரினால் நடாத்தப்படும் இரண்டாம் தர திறன் மட்ட மொழிக் கற்கைநெறிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இவ்வரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாமை அல்லது தகுதிகாண் தடைதாண்டிப் பரீட்சையில் குறித்த காலப்பகுதிக்குள் சித்தியடையாமை எதிர்கால சம்பள ஏற்றம் தள்ளிப்போடப்படுவதற்குக் காரணமாக அமையலாம்.

**5. சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனை :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதை, தபுதாரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(ii) குறித்தொதுக்கப்படும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கடமைப்பட்டிருப்பதோடு கண்டி (ஹசலக), அம்பாறை, அம்பாந்தோட்டை, பொலநறுவை, மொனராகலை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள சேவை நிலையங்களிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள சேவை நிலையங்களிலும் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமையளிக்கப்படும்.

(iii) 1424/34 ஆம் இலக்க 2006.01.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டு தற்போது செயல்வலுவிலுள்ள இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிலும் ஆட்சேர்ப்புத் திட்டத்திலும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

**6. விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் விண்ணப்பத்தை ஏ4 (21செ. மீ. x 29 செ. மீ.) அளவுடைய தாளொன்றை உபயோகித்து அதன் இரு பக்கத்திலும் அமையுமாறு இலக்கம் 1 முதல் 4 வரை முதலாம் பக்கத்திலும் இலக்கம் 5 இல் இருந்து 7 வரை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சியவை 3 ஆம் பக்கத்திலும் அடங்குதல் வேண்டும். உரிய தகவல்கள் தமது சொந்தக் கையெழுத்தினால் எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்பொழுது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பப்படிவங்களும் முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவுறுத்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் (Photo state) பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் விரும்பத்தக்கது. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவுறுத்தல்களில் குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமைந்துள்ளனவா என விண்ணப்பதாரி பரிசீலனை செய்து பார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(ஆ) திறந்த/ மட்டுப்படுத்திய இரு போட்டிப் பரீட்சைகளும் ஒரே பரீட்சையாக நடாத்தப்படுவதால் ஒரு விண்ணப்பதாரிக்கு திறந்த/ மட்டுப்படுத்திய இரு போட்டிப் பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்க முடியாது. இதன்படி, விண்ணப்பதாரி ஒருவர் திறந்த/ மட்டுப்படுத்திய இரு பரீட்சைகளில் ஒரு பரீட்சைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

(இ) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள 2 பதவிகளுக்கும் எவரேனும் விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஒரு விண்ணப்பத்தை மாத்திரம் பயன்படுத்துதல் வேண்டும்.

(ஈ) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(உ) உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் 2015, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒருங்கிணைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2015" எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(எ) விண்ணப்பதாரி ஒருவருக்கு ஒரு பதவிக்கு அல்லது சகல பதவிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும். இதற்கான பரீட்சைக் கட்டணம் 750 ரூபா ஆகும். அப்பணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் வருமானத் தலைப்பின்கீழ் நாட்டில் இருக்கும் தபால்/உப தபால் நிலையங்களில் செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் எதிர்காலத்தில் பயனளிக்கும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன் காசுக் கட்டளை, முத்திரை என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஏ) முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவமொன்று தபாலில் காணாமல் போனமை அல்லது தாமதமாகக் கிடைத்தமை தொடர்பாக திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(ஐ) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். ஏதேனும் நிறுவனத்தில் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற அதிகாரியினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரச பாடசாலையொன்றின் அதிபர், கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, சட்டத்தரணி, அரச சேவையில் பதவி நிலை அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர், 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேலதிகமான வருடாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் அல்லது நிரந்தர பதவி நிலை தரத்திலுள்ள அலுவலர் மூலம் அத்தாட்சிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

(ஒ) ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**7. பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், நகரம், விண்ணப்பிக்கும் பதவிகள், விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்துடன் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தலும், பொருத்தமாயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழையும் கொண்ட, முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் பரீட்சை அனுமதி அட்டைகளை வழங்குவார். விண்ணப்பதாரி ஒருவர் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் தமது கையொப்பம் உறுதிசெய்யப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். பரீட்சை அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதாவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பூர்த்திசெய்துள்ளதாகக் கருதப்படலாகாது.

(ஆ) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே அதுபற்றிய அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி 2 அல்லது 3 நாட்களில் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தம்வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தினதும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் நிழற்படப் பிரதியுடன் பதிவுத் தபாலிட்ட பற்றுச்சீட்டையும் அத்துடன் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், உமது பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியே இருப்பவர்கள் மேற்கூறிய விபரங்களுடன் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தமது தொலைநகல் (Fax) இலக்கத்தையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் (Fax) மூலம் அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

(இ) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு எவ்வித பிரயாணச் செலவுகளோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்பட மாட்டாது.

(ஈ) ***ஆளடையாளம்.***- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக கீழ்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப் படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(உ) ***பாடப்பரப்பு :***

(i) விவேகப் பரீட்சை.- (1 மணித்தியால வினாத்தாள்) - 100 புள்ளிகள். பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத் திறன், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பவற்றை மதிப்பிடுவதற்கான பல்தேர்வு சுருக்க விடை கோரும் 50 வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ii) விடய அறிவுசார் வினாத்தாள் (2 மணித்தியால வினாத்தாள்) - 100 புள்ளிகள். பரீட்சார்த்தியின் அறிவை மதிப்பிடுவதற்கான கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்ட வினாத்தாளாகும். 1 ஆம் பகுதி பல்தேர்வு சுருக்க விடை கோரும் 50 வினாக்கள் அடங்கிய வினாத்தாளாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும் :-

| பதவி | விடய அறிவை மதிப்பிடுவதற்கான வினாத்தாளுக்குரிய பாடப்பரப்பு |
|---|---|
| (1) விவசாயப் போதனாசிரியர் | இலங்கை பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு இலங்கை காலநிலை வலயங்கள் பற்றிய அறிவு மண், பயிர் போஷணை நெல் உற்பத்தி ஏனைய வயற் பயிர்கள் உற்பத்தி, காய்கறி உற்பத்தி, பழ உற்பத்தி, பயிர் பாதுகாப்பு, மண் பாதுகாப்பின் முக்கியத்துவமும் பல்வேறு மண் பாதுகாப்பு முறைகளும் நீர்ப்பாசன முறைகளும் நீர் முகாமையும் பண்ணை இயந்திரமயமாக்கல் தேனீ வளர்ப்பு, மலர் வளர்ப்பு, தரை அலங்காரம் பாதுகாக்கப்பட்ட பயிர்ச் செய்கைகள் கால்நடை வளர்ப்பு. |
| (2) ஆராய்ச்சி உதவியாளர் | விவசாய விரிவாக்கம், இழைய வளர்ப்பு, தாவர தடுப்புக்காப்பு, தாவர பாதுகாப்பும் அதன் முக்கியத்துவமும், உயிரியல் தொழில்நுட்பம், விதை உற்பத்தி, விவசாய அபிவிருத்தி ஆகிய விடயங்களைக் கொண்டது. வினாப்பத்திரத்திலேயே விடையளிக்கப்பட வேண்டும். |

(ஊ) ***மொழி மூலம்.***- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தாம் தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(எ) வர்த்தமானி அறிவித்தலின் தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி பரீட்சைக் கட்டணம் செலுத்தி உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர் அனைவருக்கும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதாவது விண்ணப்பதாரி இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாகக் கருதப்பட மாட்டாது. கீழே (உ) இல் குறிப்பிடப்பட்ட உரிய 2 பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாக இருந்தால் அவை அனைத்தையும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்பிவைத்தல் வேண்டும். பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மேற்கொள்ளும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்கள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கும் தண்டனைகளுக்கும் ஆளாக நேரிடலாம்.

(ஏ) ***பரீட்சை நடைபெறும் இடமும் திகதியும்.***- இப்பரீட்சை 2016, சனவரி மாதம் கொழும்பிலும் கண்டியிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து கொழும்பில் மாத்திரம் பரீட்சையை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும். (விண்ணப்பித்த நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| பரீட்சை நிலையம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 1 |
| கண்டி | 2 |

8. **ஆட்சேர்ப்பு முறை :**

(i) மேற்கூறிய பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளிற்கும் 40% அல்லது அதற்கு அதிகமாக பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளை தெரிவுசெய்து அப்புள்ளிகளைக் கூட்டுவதன் மூலம் பெறப்படும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்னுரிமை பட்டியல் ஊடாக தெரிவுசெய்யப்படுவர்.

(ii) விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் இப்பரீட்சையின் புள்ளியினை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரியின் தகைமைகளைப் பரீட்சித்து தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்கள் மாத்திரம் வெற்றிடத்துக்காக தேர்வுசெய்யப்படுவர். (நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

(iii) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் எண்ணிக்கை விவசாய பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

(iv) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் தகைமைகள் பூரணப்படுத்தப்படவில்லை என நேர்முகப் பரீட்சையின்போது தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத் தன்மை நிராகரிக்கப்படும்.

(v) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூரணப்படுத்தப்படாமலேயே பரீட்சைக்குத் தோற்றி பரீட்சையில் சித்தியடைந்தாலும் நேர்முகப் பரீட்சைக்காக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் எவ்வித அறிவித்தலுமின்றி அவரது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(vi) போலியான தகவல்கள், திரிபுபடுத்தப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்து நியமனத்தைப் பெற்றாலும் அதுபற்றி தெரியவந்தவுடன் அவரது நியமனம் செல்லுபடியற்றதாக்கப்படுவதோடு அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(vii) *பெறுபேறுகளை வெளியிடல்.*- ஒவ்வொரு பாடத்திலும் 40% அல்லது அதற்கு மேல் பெற்று சித்தியடையும் அபேட்சகர்களின் பெயர்ப்பட்டியலொன்று விவசாயத் திணைக்களப் பணிப்பாளரின் அனுமதியுடன் நேர்முகப் பரீட்சைக்காக வழங்கப்படும்.

9. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக நியமன அதிகாரி இறுதி முடிவெடுப்பார். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானப் பத்திரத்தின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவித்தல்களுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

10. மும்மொழிகளிலுமான இவ்வறிவித்தலில் முரண்பாடுகள் காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலே செல்லுபடியானதாக கருதப்படும்.

ஆர். ஆர். ஏ. விஜேகோன்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
2015, ஒற்றோபர் 7.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

**விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் III ஆம் வகுப்பில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015**

பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் 2
தமிழ் 3
ஆங்கிலம் 4
[ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்கு தோற்ற உள்ள பரீட்சை நிலையம் :
கொழும்பு - 1
கண்டி - 2
[ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பதவி/பதவிகள் (முன்னுரிமைப் பிரகாரம் விண்ணப்பிக்கும் பதவிகளை தொடராகக் குறிப்பிடுக.)

விவசாயப் போதனாசிரியர் - 01
ஆராய்ச்சி உதவியாளர் - 02

| விண்ணப்பிக்கும் பதவி | பதவியின் இலக்கம் |
|---|---|
| | |
| | |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னரும் வருமாறு (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : GUNAWARDHANA H. M. S. K)

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்):----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

1.5 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. நிரந்தர முகவரி :-
 2.1 ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.
 2.2 சிங்களத்தில்/தமிழில் :----.
 2.3 அனுமதி அட்டைகளை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
 2.4 வதியும் மாவட்டம் :----.
 2.5 பிரதேச செயலகப் பிரிவு :----.

3. பால் :
 (ஆண் - 0, பெண் - 1)
 (உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

4. பிறந்த திகதி :
 4.1 ஆண்டு : மாதம் : திகதி :

 4.2 விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

 விவாகமாகாதவர் - 1
 விவாகமானவர் - 2
 (உரிய இலக்கத்தினை கூட்டி னுள் எழுதவும்)

5. கல்வித் தகைமைகள் (மொழி மூலத்துடன்) :
 (அ) கல்வி பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சை :

| | முதல் அமர்வு | இரண்டாம் அமர்வு |
|---|---|---|
| (i) வருடமும் மாதமும் : | ------------------------------- | ------------------------------- |
| (ii) பரீட்சை சுட்டெண் : | ------------------------------- | ------------------------------- |
| (iii) மொழி மூலம் : | ------------------------------- | ------------------------------- |
| (iv) பரீட்சை முடிவுகள் : | | |

| முதலாம் அமர்வு | | | இரண்டாம் அமர்வு | | |
|---|---|---|---|---|---|
| | பாடங்கள் | தரம் | | பாடங்கள் | தரம் |
| 1. | | | 1. | | |
| 2. | | | 2. | | |
| 3. | | | 3. | | |
| 4. | | | 4. | | |
| 5. | | | 5. | | |
| 6. | | | 6. | | |
| 7. | | | 7. | | |
| 8. | | | 8. | | |
| 9. | | | 9. | | |
| 10. | | | 10. | | |

6. அனுபவம் :
 6.1 தற்போது வகிக்கும் பதவி :----.
 6.2 அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி :----.
 6.3 அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
 6.4 நிரந்தர ஓய்வூதிய சம்பளத்துடன் கூடிய சேவைக்காலம் :----.
 6.5 2015, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி உடன் முன்னரான 5 வருட காலத்திற்குரிய அனைத்துச் சம்பள உயர்வுகளையும் பெற்றுள்ளீரா ?

7. தொழிற் தகைமைகள் :-

| டிப்ளோமா | டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர் | சித்தியடைந்த வருடம் | மொழி மூலம் | பரீட்சை சுட்டெண் | டிப்ளோமா செல்லுபடி யாகும் திகதி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/உப தபால் அலுவலகம் :----.
 8.1 கட்டணம் செலுத்தப்பட்ட திகதி :----.
 8.2 பற்றுச்சீட்டு இலக்கம் :----.
 8.3 செலுத்திய தொகை :----.

| |
|---|
| பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழன்றுவிடாதபடி ஒட்டுக.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை தம்வசம் வைத்துக்கொள்க.) |

9. இப்பரீட்சையின் நிபந்தனைகள் அனைத்தையும் பேணி நடக்க இணங்குகிறேன்.

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**.- இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிமொழிகிறேன். இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அறிய நேர்ந்தால் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும் நியமனம் பெற்ற பின் அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடைபெறுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை பேணி நடப்பதாகவும் இணங்குகிறேன். அத்துடன் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவேன் எனவும், அவ்வாறே நான் விண்ணப்பிக்கும் பதவிகளுக்காக ஒரு விண்ணப்பப்பத்திரத்தை மாத்திரம் அனுப்பி வைப்பதாகவும் உறுதியளிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................. எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் இவர் ................................. ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)
திகதி :----.

(அரச திணைக்களமொன்றின்/பாடசாலையொன்றின் தலைவர் அல்லது சமாதான நீதவான், சட்டத்தரணியொருவர், அரச சேவையின் பதவிநிலை தரத்திலுள்ள உத்தியோகத்தரொருவர் மூலம் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

11.1 **தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் இணைந்திருப்பவர்களுக்காக** (தேவையற்றதை கீறிவிடவும்).

மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் தோற்றுவதற்காக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உண்டு/இல்லை எனவும் அவர் இப்பரீட்சையில் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் இத்திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது/பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அத்துடன் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும் (பதவி முத்திரை).

திகதி :----.

10-958

## இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2015

(முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பாடநெறி)

இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க மேற்படி பாடநெறி இல. 1930/12 மற்றும் 2015.09.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் 2016, மாச்சு மாதம் ஆரம்பிக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. (i) இப்பாடநெறி ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் ஆங்கில மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படுவதுடன், பாடநெறிக்கு அலுவலர்களைத் தேர்ந்தெடுத்தல், பாடநெறியை நெறிப்படுத்தல், பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல், பாடநெறி சான்றிதழ்களை வெளியிடல் மற்றும் சலுகைக் காலம் வழங்கல் சம்பந்தமாக அப்பீடத்தின் பீடாதிபதியினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பாடநெறியைத் தொடரும் பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில், இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் தண்டனை மற்றும் தாபனக்கோவையின் ஏற்பாடுகள் என்பனவற்றுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் பாடநெறி சம்பந்தமாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் பாடநெறியின் ஆரம்பத்தில் தங்களுக்கு அறிவிக்கப்படும்.

3. இப்பாடநெறி தொடர்பாக விண்ணப்பிப்பதற்கான மாதிரிப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரி தாமாகவே விண்ணப்பப்படிவம் ஒன்றைத் தயாரிக்க வேண்டியுள்ளதுடன், இலங்கை தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த மத்திய அரசாங்கத்தின் அலுவலர் ஒருவராயின், தமது திணைக்களத்தின் தலைவர் ஊடாகவும், இலங்கை தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த மாகாண அரசாங்கத்தின் அலுவலர் ஒருவராயின், அவர்கள் சேவையாற்றுகின்ற மாகாண சபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும், 2015, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடம், இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொடை எனும் முகவரிக்கு தனது விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், இலங்கை தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2015 (முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பாடநெறி) என குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை எவ்வித விசாரணையுமின்றி நிராகரிப்பதற்கு பீடாதிபதிக்கு அதிகாரமுண்டு.

4. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தின் பீடாதிபதி திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றை பாடநெறியின் ஆரம்பத்தில் அல்லது பாடநெறி கால எல்லையினுள் முன்னளித்து ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரர்கள் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) தமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;

அல்லது

தமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆள் அடையாளத்தை உறுதிசெய்யக்கூடிய ஆவணம்.

5. **விண்ணப்பம்** :

(i) ஏ4 அளவுடைய தாளில் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சு செய்து தயாரித்துக் கொள்ள முடியுமாக இருந்தபோதிலும், அது சரியாகவும் நேர்த்தியாகவும் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தினாலேயே நிரப்பப்படல் வேண்டும். விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மாத்திரம் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலுவலர்களின் பெயர் பாடநெறியின் சகல சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப் படுவதன் காரணமாக அது தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். ஏதேனும் ஒரு வகையில் பாடநெறிக் காலத்தினுள் அதில் மாற்றமேற்படும் பட்சத்தில், அதுபற்றி திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் எழுத்துமூலம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பீடாதிபதி, முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பம் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப் பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள மொழி மூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்திராத விண்ணப்பங்களும், முழுமையான தகவல்கள் வழங்கப்படாத விண்ணப்பங்களும் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப் பட்ட விண்ணப்பமானது, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தினை ஒத்திருக்கின்றதா என்பது பற்றி விண்ணப்பதாரி பரிசோதித்துப் பார்க்க வேண்டியுள்ளதுடன், அவ்விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

(iii) விண்ணப்பதாரி விண்ணப்பத்தின் வலதுபக்க மேல் மூலையில் தரப்பட்டுள்ள கூட்டினுள் தபால் முத்திரை ஒன்றின் அளவில் புகைப்படம் ஒன்றினை கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். அத்துடன், தபால் முத்திரை ஒன்றின் அளவிலான புகைப்படம் ஒன்றை விண்ணப்பத்துடன் (ஒட்டாது) இணைத்து அனுப்புதல் வேண்டும்.

6. **பாடநெறிக் கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம்** :

(i) இப்பாடநெறியைத் தொடரவுள்ள அலுவலர்கள் 17,500 ரூபா தொகையை மக்கள் வங்கி, கங்கொடவில கிளையில், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தின், பீடங்களுக்கான அபிவிருத்தி நிதிய நடைமுறைக் கணக்கு இல. 097100140002229 எனும் பெயருக்கு அலுவலர் பணியாற்றுகின்ற நிறுவகத்தின் மூலம் காசோலையாகவோ, வங்கி வரைவாகவோ, குறித்த

விண்ணப்பதாரியினால் குறிப்பிட்ட தொகையை வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பீடாதிபதி, முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பிரிவிற்கு பாடநெறி ஆரம்பிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அதில் தாபனக் கட்டணங்கள், அச்சுக் கட்டணங்கள், பரீட்சைக் கட்டணங்கள், வளவாளர்களுக்கான கட்டணங்கள், ஒருங்கிணைப்புக் கட்டணங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன ;

(ii) எவ்வாறாயினும், ஆரம்பத்தில் பாடநெறிக்கு உரிய பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில், அதன் பின்னரான தவணைகளில் அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றும்போது, 1,000 ரூபா பரீட்சைக் கட்டணமாகவும், 2,000 ரூபா ஒரு பாடத்துக்கான கட்டணமாகவும் செலுத்துதல் வேண்டும். ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத் துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடாதிபதியின் ஆலோசனை களுக்கமைய அக்கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும் ;

(iii) எச்சந்தர்ப்பத்திலும் இப்பாடநெறிக்காக அறவிடப்பட்ட தொகை மீளளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சை அல்லது பாடநெறி தொடர்பாகவோ வேறொரு அலுவலருக்கோ மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

7. **பாடநெறியைத் தொடரவேண்டிய தேவைப்பாடு :**

(i) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு ஐந்து (5) ஆண்டுகளைக் கடப்பதற்கு முன்னர் சகல அலுவலர்களும் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான III ஆம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ii) 2013.06.01 ஆந் திகதியளவில் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு ஐந்து (5) ஆண்டுகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்களுக்கு III ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படும்.

**குறிப்பு**.- திணைக்களத் தலைவரினால் அந்தந்த அலுவலர்களின் சேவைமூப்பு மற்றும் 7 (i), 7 (ii) ஆம் பந்திகளின் விடயங்கள் சம்பந்தமாக அவதானம் செலுத்தும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

8. **பாடநெறிக்கு தெரிவுசெய்யும் முறை**.- இலங்கை தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்கள் அத்தரத்தில் அமர்த்தப்பட்ட சேவை மூப்பின் ஒழுங்குமுறைக்கமைய, பாடநெறி தொடர்பாக அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும்போது முன்னுரிமை அளிக்கப்படும்.

9. விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல அலுவலர்களும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் பேணப்பட்டு வருகின்ற தரவு முறையினுள் உள்வாங்கப்படுவதுடன், ஒரு முறையில் 200 பேர்களைக் கொண்ட இரு குழுக்களாக ஆண்டுக்கு 800 பேர் இப்பாடநெறியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பிறபாடு கடிதம் மூலம் குறித்த திணைக்களங்களுக்கு அமைச்சினால் அறிவிக்கப்படும். பாடநெறியில் கலந்து கொள்வோர் போதாதுவிடின் மாத்திரம், வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் இப்பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படும்.

10. **பாடநெறி தொடர்பான பாடத்திட்டம்** :

| தொடர் இல. | பாடத்திட்டம் | கிரடிட் எண்ணிக்கை | கிரடிட் மணித்தியாலங்கள் |
|---|---|---|---|
| 1 | அரசாங்க நிதி முகாமைத் துவம் | 2 | 30 |
| 2 | மனிதவள முகாமைத்துவம் (மூலக் கோட்பாடு) | 2 | 30 |
| 3 | பிரச்சினை தீர்த்தல் முகா மைத்துவம் (நிறுவகத்தின் நோக்கங்கள், குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் போதான பிரச்சினை களைத் தீர்த்துக்கொள்ளும் கோட்பாடுகளின் நடை முறைப் பயன்பாடு) | 2 | 30 |
| 4 | நிறுவன நடத்தை | 2 | 30 |
| 5 | செயற்திட்ட அறிக்கை- தத்தமது தொழில்துறை சம்பந்தமாக முகங்கொடுக்க நேரிடுகின்ற பிரச்சினை அல்லது தொழில்துறை தொடர்பான ஆய்வுக் கட்டுரை | 2 | 30 |
| | | 10 | 150 |

11. இவ்வறிவித்தலின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத எவ்வித விடயம் சம்பந்தமாகவும் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஜே. தடல்லகே,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2015, ஒற்றோபர் 14.

(வர்த்தமானி அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பம் www.pubad.gov.lk தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.)

மாதிரி விண்ணப்பப்படிவம்

தபால் முத்திரை அளவிலான புகைப்படம் இங்கு ஒட்டவும். ☐

☐
(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2015**

(முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பாடநெறி)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   உதாரணம் : GUNAWARDHANA, M. G. B. S. K.
   (ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (இ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. தாங்கள் மாகாண அரசாங்க சேவை அல்லது எவ்வித அரசாங்க சேவைக்கு உட்படுகின்றீர்கள் என்பது பற்றி உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக : ☐

   (அரசாங்க சேவை-10/மேல் மாகாண அரசாங்க சேவை-01/மத்திய மாகாண அரசாங்க சேவை-02/தென் மாகாண அரசாங்க சேவைக-03/வட மாகாண அரசாங்க சேவை-04/கிழக்கு மாகாண அரசாங்க சேவை-05/வடமேல் மாகாண அரசாங்க சேவை-06/ வடமத்திய மாகாண அரசாங்க சேவை-07/ ஊவா மாகாண அரசாங்க சேவை-08/ சப்பிரகமுவ மாகாண அரசாங்க சேவை-09)

3. பதவிப் பெயர் :----.

4. தாங்கள் பணியாற்றுகின்ற உப திணைக்களம்/பிரிவு :----.

5. தாங்கள் பணியாற்றுகின்ற திணைக்களம் :----.

6. அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   சிங்களத்தில்/தமிழில் :----.

7. தனிப்பட்ட முகவரி :----.

8. மின்-அஞ்சல் :----.

9. தொலைபேசி இலக்கம் :-

   தனிப்பட்ட : ☐☐☐☐☐☐☐☐☐☐

   அலுவலக : ☐☐☐☐☐☐☐☐☐☐

10. பால் நிலை :
    ஆண்-M
    பெண்-F ☐
    (குறித்த எழுத்தைக் கூட்டினுள் எழுதுக.)

11. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :
    ☐☐☐☐☐☐☐☐☐☐
    (துங்களால் உண்மைப் பிரதியென உறுதிப்படுத்தப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதியொன்றை இணைக்கவும்.)

12. (i) பிறந்த திகதி :

    ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

    (ii) தரம் 1 இற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி :

    ஆண்டு ☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

    (iii) விண்ணப்பம் கோரப்படும் திகதியன்று தரம் 1 இல் திருப்திகரமான சேவைக்காலம் :

    வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

    (துங்களால் உண்மைப் பிரதியென அங்கீகார ஒப்பமிடப்பட்ட 1 ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதியை இணைக்கவும்.)

    (iv) 2013.06.01 ஆந் திகதியில் 1 ஆம் தரத்தின் சேவைக்காலம் :

    வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து தகவல்களும் சரியானவை எனவும் மேலும், பாடநெறியை நெறிப்படுத்தல், பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல், பாடநெறி சம்பந்தமாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தகப் பிரிவின் பீடாதிபதியினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும், தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுவேன் என உறுதியுரைக் கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

எனக்கு எதிராக எதுவித முடிவுறுத்தப்படாத ஒழுக்காற்று விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை எனவும், ........................ ஆந் திகதியில் இருந்து நான் பொது செயலாற்றலின்கீழ் II/I விசேட தரத்திற்கு பதவியுயர்வு பெறுவதற்கான உரிய தகைமைகள் அனைத் தையும் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தில் திரு./திருமதி/செல்வி ..................................... சேவையாற்றுகின்றார் எனவும், நான் அவரை தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும், ..................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின்
கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

மேலே இல. 1 இல் இருந்து 12 வரையிலான பந்திகளில் அடங்கியுள்ள தகவல்கள் சரியானவை எனவும், 7 ஆம் பந்தியின் குறிப்புக்களுக்கு அமைய அவ்விண்ணப்பதாரி இப்பாடநெறியில் கலந்து கொள்வதற்கு தகைமை பெற்ற இலங்கை தொழில்நுட்பச் சேவையைச் சேர்ந்த அலுவலர் எனவும், உரிய பாடநெறிக் கட்டணம் திணைக்களத்தினால் செலுத்தப்படும் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :----.

**சரி பார்க்கவும் :**

(1) தங்களால் உண்மைப் பிரதியென உறுதிப்படுத்தப் பட்ட தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது. ☐

(2) முத்திரை அளவிலான புகைப்படப் பிரதி விண்ணப்பத்தின் இடதுபக்க மேல் மூலையில் ஒட்டப்பட்டுள்ளது. ☐

(3) முத்திரை அளவிலான புகைப்படப் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ☐

(4) 1 ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்ட கடிதத்தில் தங்களால் உண்மைப் பிரதியென அங்கீகார ஒப்பமிட்ட கடிதம் இணைக்கப்பட்டுள்ளது. ☐

10-1101

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.